செ.கு.எண் : 21 நாள்: 19/1/13

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 19.1.2013

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் வட்டம், பச்சமலைப் பகுதியில் உள்ள மொடச்சூர் கிராமத்தில் ஒரு வீட்டில் 3.1.2013 அன்று சமையல் செய்யும் போது சிலிண்டர் வெடித்த தீ விபத்தில், தீயினை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, கோபிசெட்டிபாளையம் தீயணைப்பு நிலையத்தைச் சேர்ந்த முன்னணி தீயணைப்பு வீரர் திரு. ஆறுமுகம் தீயணைப்பு வீரர் திரு. திருமலைசாமி, திரு. யுவராஜ் ஆகிய மூவரும் பலத்த தீக்காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என்பதை அறிந்து நான் மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்பட்ட தீக்காயங்கள் காரணமாக மருத்துமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் மூவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களது மருத்துவ சிகிச்சைக்கான செலவுகளை அரசே ஏற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

19/1/2013

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9